Registered at the G. P. O. as a Newspaper

விசேஷ பதிப்பு

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

Jegajothi
TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி மாசி 14-ஆம் நாள் ரம்ழான் 9. (25-2-61) சனிக்கிழமை இதழ் 13

# எஸ். ஜே. வி. - அஸீஸ் சந்திப்பு

## மேயர் மறியல் செய்வார்

## நகரசபை அங்கத்தவர்கள் புதன்கிழமை சத்தியாக்கிரகம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாநகர மேயர் துரைராஜாவும் மாநகர சபை அங்கத்தவர்கள் பதினன்கு பேரும் தமிழரசுக் கட்சித் தொண்டர்களுடன் சேர்ந்து அடுத்த புதன்கிழமை யாழ்ப்பாணக் கச்சேரிமுன் மறியல் செய்வார்கள்.

சென்ற திங்கட்கிழமை மறியல்செய்த சத்தியாக்கிரகிகள் மீது பொலிசார் மிருகத்தனமாகத் தாக்கியதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக மேயரும் அங்கத்தவர்களும் மறியல் செய்வதென நேற்றுக் காலை தீர்மானிக்கப் பெற்றது.

யாழ்ப்பாணமாநகரசபையின் விசேஷஅவசரக்கூட்டமொன்று நேற்று மாலை மேயர் திரு. ரி. எஸ். துரைராஜாவின் தலைமையில் நடைபெற்றது. சகல அங்கத்தினர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கச்சேரிமுன் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் மறியல் இயக்கம் ஆரம்பித்த பொழுது பொலிசார் சத்தியாக்கிரகிகளைத் தாக்கியதைக் கண்டிக்கும் முகமாக இக்கூட்டம் நடைபெற்றது.

"சத்தியாக்கிரகிகள் மீது பொலிசார் மிருகத்தனமாகத் தாக்கியதை வன்மையாகக் கண்டிப்பதுடன் அதற்குப் பகிரங்கமாக ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் அடுத்த புதன்கிழமை கச்சேரிமுன் சத்தியாக்கிரகிகளுடன் சேர்ந்து நாங்களும் மறியல் செய்வோம்" என்னும் தீர்மானம் நேற்றைய கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இத்தீர்மானத்தை திரு. ஏ. ஜி. இராஜசூரியர் பிரேரித்தார்.

சென்ற இருபதாந் திகதி சத்தியாக்கிரகிகளைப் பொலிசார் மிருகத்தனமாகத் தாக்கியதையும் கச்சேரியினுள் நின்ற அரசாங்க ஊழியரைத் தாக்கியதையும் கண்டிப்பதுடன் அச்சம்பவம் பற்றி விசாரணை நடத்த விசாரணைக்குழுவொன்று நியமித்து வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்

(3-ம் பக்கம் பார்க்க)

### ரூளோப் செய்தி ஸ்தாபன தலைவர் திடீர் மரணம்

கொழும்பு 25

ரூளோப் செய்தி, ஸ்தாபனத்தின் டிரைடர் திரு ராஜா திலகரத்ன இன்று அதிகாலையில் மாரடைப்பால் திடீரெனக் கொழும்பிலுள்ள தமது இல்லத்திற் காலமானர்.

இவர் 'ஜனதா' எனும் சிங்களத் தினசரியின் ஆசிரியராக முன்னர் பணியாற்றியவர், சிறந்த சினிமா விமர்சகராகவும் இவர் விளங்கினர். இவரது பிரிவைக் குறித்து 'ஈழநாடு' தனது அனுதாபத்தை தெரிவிக்கின்றது.

இலங்கையில் வெளியாகும் தமிழ் சிங்களப் பத்திகைகளின் ஆசிரிய தலையங்கங்களையும், பிரசுரிக்கப்படும் செய்திகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளிநாட்டுஸ்தானிகராலயங்களுக்குக் கிடைக்க இந்த ஸ்தாபனம் பணிபுரிந்து வருகிறது.

### "தமிழ்நாடு உருவெடுத்தது"

புதுடில்லி

சென்னை ராஜ்யத்தின் பெயரை "தமிழ்நாடு" என மாற்றி அழைப்பதென்று சென்னை அரசாங்கம் தீர்மானித்து விட்டது.

சர்க்கார் கட்சித்தலைவரும், நிதிமந்திரியுமான திரு. ஸி. சுப்ரமணியம் நேற்று இத்தகவலை சட்ட சபையில் வெளியிட்டார்.

## மறியல் நடக்கும் இடத்தில் மலைநாட்டுத் தலைவர்கள்

யாழ்ப்பாணம், சனி.

தமிழரசுக்கட்சி ஆரம்பித்துள்ள மறியல்இயக்கம் இன்று ஆறுவது தினமாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. காலஞ்சென்ற திரு. வன்னியசிங்கத்தின் தொகுதியான கோப்பாய்த் தொகுதித் தொண்டர்கள் இன்று மறியல் செய்கின்றனர். அமரர் வன்னியசிங்கத்தின் உருவப் படங்களையும் சுலோக அட்டைகளையும் தாங்கிக்கொண்டு திரு. எம். பாலசுந்தரத்தின் தலைமையில் கட்சிக் காரியாலயத்திலிருந்து தொண்டர்கள் ஊர்வலமாக கச்சேரியை அடைந்தனர்.

### மலைநாட்டுத் தலைவர்கள்

மலைநாட்டுத் தலைவர்களான திரு. கே. இராஜலிங்கம், திரு. எஸ். சோமசுந்தரம், ஜனப் ஏ. அஸீஸ் ஆகியோர் மறியல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்று தலைவர்களையும், தொண்டர்களையும் சந்தித்தனர்.

மலைநாட்டுத் தலைவர்கள் மூவரும் திரு. செல்வநாயகத்தைச் சந்தித்து சிலமணிநேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

வவனியாத்தொகுதியில் சென்ற பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட திரு.வின்சென்ட், சட்டசபையில் அங்கத்தவராகவிருந்த திரு ரி. எம். சபரத்தினம், கல்முனை தொகுதியில் போட்டியிட்ட மசூர் மௌலானு ஆகியோரும் இன்று காலை கச்சேரிக்கு முன் நின்று மறியல் இயக்கத்தைப் பார்வையிட்டனர்.

கொழும்பு சட்டக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் ஜனப் மசூர் மௌலானு தலைமையில் மறியல் செய்கின்றனர்.

### மந்திரியைச் சந்திப்பர் அரசாங்க ஊழியர் சங்கக் கூட்டம்.

யாழ்ப்பாணம் சனி.

அரசாங்க ஊழியர் நிலைபற்றி ஆராய்ந்து முடிவு செய்வதற்காக அரசாங்கசேவைக் குமாஸ்தாக்கள் சங்கத்தின் அவசரக் கூட்டம் நடைபெறவிருக்கிறது இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பொதுச்சபைஅங்கத்தவர் திரு எஸ். இரத்தினசபாபதி கொழும்புக்குப் பிரயாணமாகிறர்.

மந்திரிகளையும் குமாஸ்தாக்கள் சங்கத்தலைவர்கள்சந்தித்து யாழ்ப்பாண அரசாங்க ஊழியர் நிலை பற்றித் தெரிவிப்பார்களெனத் தெரியவருகிறது.

### தமிழ் ஸ்ரீ கார்கள் மீது வழக்கு?

யாழ்ப்பாணம் சனி,

தமிழ் "ஸ்ரீ" இலக்கம் பொறித்த கார்களின் சொந்தக்காரர்களின் பெயரையும் விலாசத்தையும் பொலிசார் எடுத்துக் கொள்ள ஆரம்பித்துள்ளனர். தமிழ் "ஸ்ரீ" எழுத்துப் பொறித்த கார் சொந்தக்காரர்கள் மீது வழக்குத்தொடரப்படுமென ஒரு பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## "மறியலுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் தொடர்பில்லை"

### எஸ். ஜே. வி. விளக்கம்

யாழ்ப்பாணம்

"அரசாங்க ஊழியர்களை மறியல் இயக்கத்தில் ஈடுபடச் செய்வது தமிழரசுக் கட்சியின் நோக்கமல்ல. அரசாங்க ஊழியர்களுக்கும் மறியல் இயக்கத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை."

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். [illegible] வி. செல்வநாயகம் 'ஈழநாடு' பிரதிநிதிக்கு அளித்த ஒரு பேட்டியில் தெரிவித்தார்.

"நேரடிப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்திலேயே அரசாங்க ஊழியர் ஈடுபட்டிருப்பது பயங்கர முடிவுகளைத் தரக்கூடும்" [illegible] லேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர், போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக திரு. சிவசிதம்பரம் கூறியது சரியல்ல என்று கூறிய திரு. செல்வநாயகம் மேலும் வருமாறு குறிப்பிட்டார்.

சிங்களம் அரசகரும மொழியாக்க[illegible] போது தமிழ்ப் [illegible] கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இப்பகுதிகளில் தமிழ் மொழியிலேயே அரசாங்க அலுவல் நடைபெறவேண்டும். இந்த ஜனநாயக உரிமையைப் பெறுவதற்காகவே தமிழரசுக் கட்சி நேரடி இயக்கத்தை ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணக் கச்சேரியில் பெருந் தொகையான அரசாங்க ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். இங்கு தமிழ் மொழிக்கு அதற்குரிய அந்தஸ்து அளிக்கப்படாத காரணத்தால் வடபகுதியில் யாழ்ப்பாணக் கச்சேரியை மறியல் செய்வதற்கேற்ற காரியாலயமாக தமிழரசுக் கட்சி தெரிந்தெடுத்தது.

அரசாங்க ஊழியர்களை மறியல் இயக்கத்தில் ஈடுபடச் செய்வது கட்சியின் நோக்கமல்ல. அவர்களுக்கும் மறியல் இயக்கத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை.

பொலிசார் நடத்தைபற்றி

## டாக்டர் பெரேரா பிரச்சினை கிளப்புவார்?

### திரு. சொய்சா வந்ததன் எதிரொலி

கொழும்பு சனி

யாழ்ப்பாணத்துக்குச் சென்று நிலைமையை நேரில் கண்டறிந்து திரும்பிய சமசமாஜக் கட்சி எம். பி. திரு. பெர்ஞர்ட் சொய்சா டாக்டர் என். எம். பெரேராவையும் கட்சியின் இதர தலைவர்களையும் சந்தித்து தாம் யாழ்ப்பாணத்தில் கண்டவற்றையும் கேட்டறிந்தவற்றையும் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

இச்சம்பவம் பற்றி டாக்டர் என். எம். பெரேரா அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தவிருப்பதுடன் யாழ்ப்பாணத்தில் பொலிசார் நடந்துகொண்ட முறைபற்றி விசாரணை செய்ய பாரபட்சமற்ற விசாரணைக் கமிஷன் ஒன்றை நிறுவும்படி கேட்டுக்கொள்வாரென்றும் அறியப்படுகிறது.

"யாழ்ப்பாணத்தில் பொலிசார் மிருகத்தனமாக நடந்திருக்கிறர்களென்பதில் எவவித ஐயமுமில்லை" என்று கூறிய திரு. பெர்ஞர்ட் சொய்சா பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தமது காரியாலயத்தில் உட்கார்ந்து கொண்டு சிறிய சம்பவம்தான் நடந்தது"

(3-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

சத்தியத்தால் உலகத்தையே வெல்கின்றன். சத்தியமே மிக உயர்ந்த தத்துவமாகும். உண்மையின் தெளிவையே சான்றோர் சத்தியமென்பர்.

—கூர்ம புராணம்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு மாசி மீ 14வ. (25-2-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## மேயரின் நன்முயற்சி

யாழ்ப்பாண மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா தமிழரிடையேயுள்ள பல முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களையும் கூட்டி தமிழரசுக்கட்சியினர் இப்போது நடத்தி வரும் தமிழ் உரிமைப்போராட்டத்துக்கு அக்கட்சிகளின் பூரண ஆதரவையும் காட்டச் செய்துள்ளது தமிழர் ஒற்றுமைக்கு நல்லதொரு முயற்சியாகும்.

தமிழ்ப் பேசும் மக்களுக்கு இது மிகவும் நெருக்கடியான காலம். இப்போது நடக்கும் மொழி உரிமைப் போராட்டம் எக்காரணம் பற்றியும் தோற்றுவிட்டால், தமிழ்ச் சமூகத்தினர் இங்கு என்றென்றும் தலை தூக்க முடியாதென்று உணர்ந்தே கட்சி வேறுபாடுகளை எல்லாம் மறந்து தமிழ்த் தலைவர்கள் பலரும் இதை ஆதரிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளனர். இந்தப்போராட்டம் ஒரு கட்சியின் நடவடிக்கையாக அல்லாமல், தமிழ்ப் பொதுமக்களின் பெரும் இயக்கமாக மாறிவருவது கண்கூடு. சில்லறைக் கருத்து வேற்றுமைகள் இதுவரை என்ன இருப்பினும் அவற்றையெல்லாம் மூட்டை கட்டி ஒதுக்கிவைத்துவிட்டு, இந்த இயக்கம் நல்ல வெற்றி பெறுவதற்கு தங்கள் முழு ஆதரவையும் நல்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து பல கட்சியினரும் முன்வந்திருக்கின்றார்கள்.

இவ்விஷயத்தில் தமிழரிடை பிளவு ஏற்படுத்தி, பிரித்தாளலாமென்று யாரும் கனவு கண்டிருப்பின் அது இனி முடியாதென்பதை மேயர் கூட்டிய மகாநாடு செய்த தீர்மானம் தெளிவாக்கிவிட்டது. தமிழரிடை ஒற்றுமை ஏற்படவேண்டுமென்றும், ஒன்றுபட்டாலே உண்டு வாழ்வென்றும் பன்முறை இப்பத்திகளில் எழுதிவந்துள்ளோம். அந்த ஒற்றுமை இப்போது எதிர்பாராத முறையில் ஏற்பட்டுள்ளது பெரிதும் வரவேற்கத்தக்கது.

பொலிஸ் அடக்குமுறையை கண்டிக்கும் டாக்டர் என். எம் பெரராபோன்ற தலைவர்கள் தமிழரின் நியாயமான உரிமைகளை இனியும் தயக்கமின்றி அளிக்கச் செய்ய தங்கள் பூரண செல்வாக்கையும் இனி சற்றும் தாமதம் செய்யாமல் பயன் படுத்தவேண்டும். இயக்கம் வர வர தீவிரமடைந்து வருகிறது. விரிவடைந்து, மக்களும் உணர்ச்சிவசப்பட்டால் விபரீதங்களும் ஏற்படலாம். அதற்கு இடம் கொடாமல் ராஜீய ஞானத்துடன் தேசாபிமானிகள் உடன் தலையிட்டு இந்த நெருக்கடியைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டும். மனமுண்டானால் நிச்சயம் மார்க்கமுண்டு.

—

## துரதிருஷ்ட சம்பவம்

அரசாங்க சிப்பந்தி ஒருவர் யாழ்ப்பாண கச்சேரிக்கு சமீபத்தில், தாக்கி துன்புறுத்தப்பட்டதாக ஒரு செய்தி கூறுகின்றது. ஆத்திரப்பட்ட பொதுமக்களில் சிலரே இவ்விதம் செய்ததாகச் சொல்லப்படுகின்றது. இது உண்மையானல், நிச்சயம் இது துரதிருஷ்டமாவதுடன் இப்போது நடைபெறும் அஹிம்ஸா போர் முறைக்கு மாருவதுடன் தமிழரின் உரிமைப் போருக்கும் பண்புக்கும் தீங்கு விளைவிப்பதாகும். தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், நேற்று 'ஈழநாடு' பிரதிநிதி மூலம் அளித்த விசேஷச் செய்தியில், அஹிம்ஸையை வற்புறுத்தி, அஹிம்ஸைதான் வெற்றியளிக்க முடியுமென்ருர். மேற்குறித்த சம்பவம் அஹிம்ஸைக்கு நேர் மாருகுமாதலால், தமிழரின் உரிமைப் போர் வெற்றி பெற வேண்டுமென்று ஆர்வமுள்ளவர்கள் இவ்வித சம்பவம் நடைபெறுவதைக் கூடுமானவரை தடுக்க கடமைப்பட்டிருக்கிருர்கள். தமிழரசுக் கட்சித் தலைவர்கள், இவ்வித சம்பவங்களைக் கண்டிப்பதின் மூலம், அஹிம்ஸா நெறியிலிருந்து மாருமல் பாதுகாத்தவர்களாவர்.

# மறியல் இயக்கத்தால் அரசினருக்கு பெருங்கவலை

## முட்டுக்கட்டையைத் தீர்க்க பிரமுகர்கள் முயற்சி

### கூட்டு பார்லிமெண்ட் கமிட்டி மூலம் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க யோசனை

— நமது அரசியல் நிருபர் —

சென்ற திங்கட்கிழமை முதல் தமிழரசுக்கட்சி நடத்தி வரும் மறியல் இயக்கம் அரசாங்கத்துக்கும் சிறப்பாக பிரதம மந்திரிக்கும் அதிக கவலை அளித்திருப்பதாகத் தெரிகிறது!

யாழ்ப்பாணக் கச்சேரி இன்றுடன் ஆறு நாட்களாக அடைபட்டுக் கிடக்கின்றது. எந்த வேலையும் அங்கு நடைபெறவில்லை. அரசாங்கத்தின் மதிப்புக்கே இது பெரிய இழுக்கென்றும், நிலைமையை மேலும் மோசமாக்காமல் கச்சேரியைத் திறக்க நல்ல வழி என்னவென்றும் மந்திரிகள் ஆலோசனை செய்துவருகிருர்கள்.

இதற்கிடையே அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீகாந்தா நேற்று முதல் சுகவீனம் காரணமாக லீவில் சென்றுவிட்டார். உதவி அதிபர் திரு. தெட்சணமூர்த்தி தற்காலிக அதிபராக வேலை பார்க்கின்ருர். சில நாட்களில் ஒரு பறங்கியர் இங்கு அப்பதவிக்கு நியமிக்கப்படலாமென்று பலத்த வதந்திகள் உலவுகின்றன.

அப்பதவிக்கு யார் வந்தாலும், அரசாங்க சிப்பந்திகள் மறியல் இயக்கம் அங்கு நடக்கும்வரை கச்சேரிக்குச் சென்று வேலை பார்ப்பார்களா என்பது சந்தேகம். குறிப்பிட்ட நாளில் அவர்கள் வேலைக்கு வராவிடில், வேலையிலிருந்து நீக்கப்படுவதாக எச்சரிக்கை செய்யப்படலாம். ஆனுலும் அவர்கள் மறியல்காரர்களை பலாத்காரமாக மீறி உள்ளே சென்று நிம்மதியாக வேலை பார்ப்பதென்பது மிகவும் துர்லபம். மேலும் பொதுமக்கள் யாரும் கச்சேரிக்கு மறியல் நடக்கும்வரை செல்வதும் சந்தேகம்.

கச்சேரி மூடப்பட்டதால் ரேஷன் அரிசி விநியோகத்துக்குத் தடையேற்படுமோ என்று ஓர் அச்சமிருந்தது. ஆனல் கூட்டுறவு ஸ்தாபனத்தினர், அரிசி விநியோகத்துக்காக கடைகளுக்கு நேரில் சென்று விசேஷ ஒழுங்குகள் செய்துவிட்டதால், அரிசி விநியோகம், கச்சேரி மூடப்பட்டிருப்பினும், வழக்கம் போல் சீராக நடைபெறும்.

* * *

மறியல் இயக்கத்துக்கு மக்களின் ஆதரவு அதிகமிராதென்றும், அது பிசுபிசுத்துவிடுமென்றும் அரசாங்க வட்டாரங்களில் சிலர் எண்ணினர். பொலிசார் கடுமையான நடவடிக்கை எடுத்தால் முதல் நாளே அது அடங்கிவிடுமென்று தப்புக் கணக்குப் போட்டனர். ஆனல் பொலிஸ் தடியடி, எதிர்பார்த்ததற்கு நேர்மாருக, மக்களுக்கு அதிக உணர்ச்சி அளித்ததுடன், தமிழரல்லாதாருக்கும் கூட, இந்த இயக்கத்தின்மீது அனுதாபம் ஏற்படச் செய்துவிட்டது. பொதுஜன உணர்ச்சி இப்படி கொதித்து எழவே மறுநாளே பொலிஸ் பலாத்காரம் நின்றுவிட்டது.

* * *

இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பதுபற்றி கவலையுடன் பிரதமர் பலருடன் ஆலோசனை செய்துவருவதாகத் தெரிகிறது. முன்னுள் அரசாங்கசபைத் தலைவரான சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, மூன்று நாட்களுக்குமுன் பிரதம மந்திரியை அந்தரங்கமாகச் சந்தித்துப் பேசியதாக விஷயமறிந்த வட்டாரங்களிலிருந்து அறிகிறேன். அரசியல் கட்சிப் பற்றில்லாத வேறு லசி தமிழ் பிரமுகர்களும் தலையிட்டு இந்தப் பெரிய முட்டுக்கட்டையைத் தீர்க்க முனைந்துள்ளதாகத் தெரிகிறது.

இலங்கையின் அரசியல் சட்டத்தை மாற்றியமைப்பது பற்றி ஒரு கூட்டு பார்லிமெண்ட் கமிட்டியை நியமிக்க இருப்பதாயும், எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் கருத்துக்களை அதில் தெரிவிக்கலாமென்றும், சபை முதல்வர் ஸி. பி. டி. சில்வா அறிவித்தார். மொழிப் பிரச்சினை முதலியவற்றைப் பற்றி அச்சந்தர்ப்பத்தில் புனராலோசனை செய்யலாமென்றும் சட்டபூர்வமாக தமிழ் மொழிக்கு நியாயமான இடம் கிடைக்கும்படி செய்யலாமென்றும், ஆகவே, இந்த நேரடி இயக்கத்தை நிறுத்தும்படியும் தமிழரசுக்கட்சியை கேட்டுக்கொள்ளலாமென்பது ஒரு சிலரது கருத்து.

ஆனல் தலைவர் எஸ். ஜே. வி. அரசாங்கத்தின் இவ்வித உறுதி மொழிகளில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும், ஏற்கனவே சூடுபட்டுவிட்டதாயும், தங்கள் நிர்ப்பந்தமான கோரிக்கைகளைத் தீர்க்காமல் சுலபமாக ஒத்திப்போடுவதாகவே இது இருக்குமென்றும் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்துவிட்டார்.

* * *

**மொழிப் பிரச்சினையை தேர்தல் விஷயமாக்காமல், 1955-ம் வருடத்துக்குமுன் அம்மொழிக்கு இருந்த அந்தஸ்தை மீண்டும் அளிக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்தாலே இந்தச் சிக்கல் தீரமுடியுமென்றும் பல அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் மெது**

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

நேற்று ஓர் அன்பர் எனக்கு டெலிபோன் செய்தார். "உங்கள் பேப்பரில் விஷயமெல்லாம் நன்ருக வருகிறது. எல்லாரும் பேப்பருக்காகக் காத்திருந்து வாங்கி விரும்பிப் படிக்கிருர்கள். இன்னெரு முக்கிய செய்தியையும் நீங்கள் பேப்பரில் போட்டால் நல்லது" என்ருர். விஷயமென்னவென்று கேட்டேன்.

"இப்போது மறியல் செய்யும் சத்தியாக்கிரகிகளுக்கு பல வர்த்தக ஸ்தாபன அன்பர்களும் தினசரி சாப்பாடு இலவசமாக அனுப்புகிருர்கள். ஒரே நாளில் பலரும் அனுப்புவதால், சில சமயம் மிஞ்சிப் போய்விடுகிறது. தொண்டர்களுக்கு உணவளிக்க விரும்பும் வர்த்தக ஸ்தாபன அன்பர்கள் தமிழரசுக்கட்சிக் காரியாலயத்துடன் முன் கூட்டியே பேசி, ஒழுங்குசெய்து கொண்டால், உணவு வீணுகாமலும், விநியோகம் சீராக நடைபெறவும் உதவியாக இருக்கும்" என்று கேட்டுக்கொண்டார்.

சத்தியாக்கிரகிகளுக்கு உணவு அளிக்க வர்த்தக ஸ்தாபனங்கள் போட்டிபோட்டுக் கொண்டு முன்வருவதில் வியப்பில்லை. அன்னதானம் செய்வது தமிழரின் உயிர் போன்ற பண்பல்லவா?

∴ ∴ ∴

ஒரு வாலிப வர்த்தக அன்பர் நேரில் வந்து தமிழ் வர்த்தகர் மறியல் இயக்கத்தில் சேர்ந்து, தமிழ்மொழி உரிமைக்காகப் போராடத் துடித்துக்கொண்டிருப்பதாயும், தமிழரசுக் கட்சியின் அனுமதியைப்பெறக் காத்திருப்பதாயும் மிக உணர்ச்சியுடன் வந்து சொன்னுர்.

"நீங்கள் தடியடிபடத் தயார்தானு!" என்று கேட்டேன். "தடியடி என்ன தமிழுக்காக உயிரே விடத்தயார்" என்று 'டக்' கென பதிலளித்தார் அந்த வர்த்தக அன்பர்! இந்தப்போர் வெற்றிபெறுவது உறுதி என்று எனக்கு நிச்சயமாகிவிட்டது.

∴ ∴ ∴

தலைவர் எஸ். ஜே. வி.யுடன் நேற்று முன் தினம் போர்க்களத்தில் பேசிக்கொண்டிருந்தேன். ஓர் அமெரிக்கப் பத்திரிகை நிருபர் கேட்ட ஒரு கேள்வியைப்பற்றிச் சொன்னுர்.

"தாங்கள் காரிலே என்ன மொழி எழுத்து அடையாளம் போட்டிருக்கிறீர்கள்?" என்று அந்த நிருபர் கேட்டதற்கு யாழ்ப்பாணத்தில் இருக்கையில் தமிழ்எழுத்திலும் தெற்கே சென்றதும் ஆங்கில எழுத்திலும் அடையாளம் போட்டிருப்பதாகத் தெரிவித்து, தெற்கே உள்ளவர்களுக்குத் தெரியாத ஒரு மொழியில் எழுதி அவர்கள் மனத்தைப் புண்படுத்தத் தாம் விரும்பவில்லை என்று கூறியதாகவும் சொன்னுர்.

பொலிஸ் தடியடிக்குப் பின் யாழ்ப்பாணத்தில் சிங்கள 'ஸ்ரீ' கார்களெல்லாம் தமிழ் 'ஸ்ரீ' கார்களாக மாறிவருகின்றன. எனது நண்பர் ஒருவர் சிங்கள ஸ்ரீ கார் வைத்திருந்தார். அதை உடன் தமிழ் ஸ்ரீ யாக மாற்றிவிடப்போவதாகச் சொன்னுர்.

∴ ∴ ∴

அந்த பொலிஸ் தடியடி, பலரையும் ஆங்கிலத்தை விட்டுவிட்டு, தமிழிலேயே கடிதங்களையும் விலாசங்களையும் எழுதும்படி செய்துள்ளதாக அறிகிறேன் அந்தத் தடியடியால்தான் எவ்வளவு நல்ல பலன்கள்!

பிட்டுக்கு மண் சுமந்த சோமசுந்தரனின் முதுகில் அன்று விழுந்த ஓர் அடி மூன்று உலகத்திலும் எல்லா உயிர்களுக்கும்பட்டதாகப் புராணம் கூறும்.

இங்கு யாழ்ப்பாணத்தில் திங்களன்று தமி[illegible]தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் பட்ட அடியும் தமிழர் ஒவ்வொருவருக்கும் பட்டு, அவர்களுக்கு தமிழில் புதிய அபிமானம் ஏற்படுத்தி வருவதைக் காண்கின்றேமல்லவா!

∴ ∴ ∴

சில சமயம் பத்திரிகையில் வரும் அச்சுப் பேய், திடுக்கிடச் செய்கிறது நேற்று இப்பத்தி[illegible]லே "தொண்டர் நம்பர் 424" கச்சேரிக்கு எதிர்ப்புறம் ஒரு 'காரில்' அமைதியாக அமர்ந்திருக்கையில்" என்று எழுதியிருந்தேன். 'காரை' இந்த அச்சுப் பேய் 'சுவராக' சில பிரதிகளில் மாற்றிவிட்டது! இந்த அச்சுப் பிழைக்காக வருந்துகி[illegible]

## இரத்தினக் கம்பளம்

பதுமன்

அவப் பொழுதிலும் தவப் பொழுது என்று சொல்லுவார்கள். ஆனல் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்னல் மறியல் இயக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தொண்டர்கள் அவமாகக் காலத்தைப் போக்கவில்லை. தமிழ் மொழி உரிமைக்காகப் புனிதமான ஒரு போராட்டத்தில் குதித்திருக்கின்றனர்.

நெருப்பு வெயிலிலும் உருகிக் கொண்டிருக்கும் தாரிலும் அகப்பட்டுக் கொண்ட தொண்டர்கள், அவமே நேரத்தைக் கழியாது தேவார திருவாசகங்களை ஓதிக்கொண்டிருக்குங் காட்சி உள்ளத்தைத் தொடுவதாக இருக்கின்றதென மட்டக்களப்பிலிருந்து வந்த நண்பர் ஒருவர் உருக்கமாகக் கூறிய போது அவருடை கன்னங்களைக் கண்ணீர்த்துளிகள் நனைத்தன.

### பாரதி பாடல்

மட்டக்களப்பு அன்பர் விடைபெற்றுக்கொண்டு சென்ற மறுகணமே வண்ணர்பண்ணையில் வதியும் பெரியார் ஒருவர் அவசர அவரமாக காரியாலயத்துக்கு வந்தார். இவர் மலாயாவில் பணியாற்றியவர். தமிழ் மொழிப்பற்றும் சுதந்திரதாகமும் மிகுந்தவர். தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு மிக்கவர். அத்துடன் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துக்களையும் படித்து வருகின்ருர்.

தொண்டர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காக அவர் பாரதி பாடல்கள் சிலவற்றைத் தொகுக்கும் முயற்சியில் உழைத்து வருகின்ருர். அன்பர்கள் சிலரின் உதவியுடன் அவற்றை அச்சிட்டுத் தொண்டர்களிடம் ஒப்படைத்தால் தான் அவருக்கு நிம்மதி உண்டாகுமென்பதை அவருடைய முகத்திலிருந்து நன்ருக அறியமுடிந்தது. ஆம், இந்தியா விடுதலைபெறுவதற்கு வீரகவி பாரதியாரின் பாடல்கள் தமிழ் மக்களுக்குப் புதிய இரத்தத்தைப் பாய்ச்சி நரம்புகளுக்கு முறுக்கேற்றின.

### கத்தியின்றி...

பாரதியாரின் வழிவந்த காந்தியுகக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என முழக்கி இந்திய மக்களைச் சத்தியாக்கிரகப் போரில் வீராவேசத்துடன் ஈடுபடச் செய்தார்.

கத்திமுனை சாதிக்கவியலாத சில காரியங்களைப் 'பேனமுனை' சாதித்து வருவது வரலாறு கண்ட உண்மை.

இந்தப் பேருண்மையை நன்கறிந்த இந்த திருவண்ணை நகர் தமிழ்ப் பெரியார் பாரதியாரின் பாடல்கள் சிலவற்றை அச்சிட்டு, மறியல் இயக்கத் தொண்டர்களின் கையிற் கொடுக்கத் தீர்மானித்திருப்பது உண்மையாகவே ஒரு தமிழ்த் தொண்டுதான்! தமிழ் வாழ்க!

# வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழை ஆட்சி மொழியாக்குக

## சிறுபான்மை பிரச்சினை பற்றி கம்யூனிஸ்ட் கிளை அறிக்கை

"யாழ்ப்பாணத்திலும் தமிழ் மக்கள் வாழும் பிறபகுதிகளிலும் கடந்த சில நாட்களாகக் கவலைதரக்கூடிய நிலையொன்று உருவாகியிருக்கிறது. சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் பிரச்சினைகளுக்கு முடிவு காணக்கூடிய மார்க்கத்தை அரசாங்கம் கடைப்பிடிக்காத காரணத்தால் தமிழ் மக்கள் மனக்கசப்பு அடையவேண்டியிருக்கிறது. சிறுபான்மையினரின் மொழி உரிமைகளை நீதிமன்ற மசோதாவில் ஏற்றுக்கொள்ளவோ விளங்கிக்கொள்ளவோ மறுத்தமையும் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட பல்வேறு பாரபட்சமான சட்ட திட்டங்களும் தேசிய ஒற்றுமைக்கு அபாயம் விளைப்பதோடு பிற்போக்கான சூழ்ச்சிகளுக்கும் இடந்தரக்கூடுமென்று அஞ்சவேண்டியிருக்கிறது" என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கிளைக் காரியதரிசி திரு. ஆ. இ. அரியரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார். அறிக்கை மேலும் கூறுவதாவது:-

அரசாங்கம் தகுந்த முறையில் நடப்பதற்கு இன்னும் இடம் உண்டு. தகுந்த முறையில் நீதிமன்ற மொழிமசோதாவில் திருத்தங்களைச் செய்வதோடு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியைச் சட்டபூர்வமாக ஆட்சி மொழியாக்கவேண்டும். அரசாங்கம் தன் "மரியாதை" காக்கும் படலத்தை மறந்து தேசிய சிறுபான்மையினரின் ஒத்துழைப்பைத் தனது முற்போக்குத் திட்டங்களுக்குப் பெறக்கூடிய முறையில் இராஜதந்திரத்துடன் நடந்துகொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் சிங்களம் அரசாங்க மொழியாவதை எதிர்ப்பதை விட்டு, தாங்கள் வாழும் பிரதேசங்களில் தங்கள் மொழி ஆட்சிமொழியாக அமையவேண்டுமென்று கோருவதுதான் சிறந்ததும் நீதியும் ஆகும். தமிழ் மக்கள் தமிழ்மொழி மூலமே ஆளப்படவேண்டும். அது அவர்கள் உரிமை என்று கருதும் சிங்கள மக்களின் ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் இக்கோரிக்கை பெற்றுத்தருமென்பது திண்ணம். தேசிய பொருளாதார முன்னேற்றத்திலிருந்து சிறுபான்மையினரைப் பிரிக்கும் கொள்கைகளை பிரசாரம் செய்தல் பொருத்தமற்றது. எங்கள் கொள்கைகளும் செயல்களும் பொது முன்னேற்றத்திலிருந்து எம்மைப் பிரிக்காதவைகளாகவும், நாட்டின் பிற இனங்களுடன் சேர்ந்து இம் முன்னேற்றத்தில் எங்கள் உரிமைகளைப்பெற வாய்ப்பளிப்பனவாகவும் இருப்பதோடு, நெற்காணிமசோதா பாடசாலை மசோதா போன்றவற்றை எதிர்க்கும் பிற்போக்குச் சக்திகளை முறியடிப்பனவாகவும் இருக்கவேண்டும்.

அரசாங்கம் வட கிழக்கு மாகாணங்களில் தமிழை ஆட்சிமொழியாகவும் நீதிபரிபாலன மொழியாகவும் ஆக்காதிருக்கும் போதிலும் மேற்படி மகாணங்களிலுள்ள ஆணையாளர்களையும் நீதி பரிபாலன உத்தியோகத்தர்களையும் வியாபார ஸ்தபனங்களையும் இவற்றோடு தொடர்புகொள்ளும் அனைவரையும் உடனடியாகவே தங்கள் அலுவல்களைத் தமிழில் செய்யுமாறு கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்கிறது. இதற்கு ஒரு பகுதியால் இன்னொரு பகுதிக்கு நெருக்கமிருக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும் நம்புகிறது.

## பிரச்சினையைக் கிளப்புவார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அறிக்கை விடுவதில் பயனில்லை" என்றார்.

அரசாங்க அதிபர் வெளியே செல்வதற்கு வேறு விதமான ஒழுங்குகளைச் செய்திருக்கலாமென்றும் திரு. பெர்னர்ட் சொய்சா கூறினர்.

தமிழரசுக் கட்சியின் இயக்கத்தில் அக்கறை செலுத்தாதிருந்தவர்களுக்குக் கூட பொலிசாரின் நடவடிக்கை தமிழரசுக் கட்சிக்கு அனுதாபத்தைத் தேடிக் கொடுத்துள்ளதென்றும் திரு. பெர்னர்ட் சொய்சா கூறினர்.

## இருதய நிபுணர்கள் கொழும்பு விஜயம்

கொழும்பு

இருதயத்தைக் கீறி சத்திர சிகிச்சை செய்வதில் கைதேர்ந்த, இரு பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்கள் ஞாயிற்றுக் கிழமை இலங்கை வருகிறார்கள். இலங்கையில் தங்கள் பரீட்சைகளை அவர்கள் நடத்திக் காட்டுவார்கள்.

## ஞானப்பிரகாசர் நினைவு நாள்

யாழ்ப்பாணம்

அறிவொளி ஞானப்பிரகாச அடிகளார் மறைந்த 14-ம் ஆண்டு நினைவு நாள் வருகிற ஞாயிற்றுக்கிழமை (26-2-61) யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் கொண்டாடப்படும். புலவர். கா. பொ. இரத்தினம் இவ்வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

## கட்டாங்காவில் ராணுவ நடவடிக்கை நிறுத்தப்படும்

கட்டாங்காவில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு கட்டாங்கா ஜனாதிபதி ஷோம்பேயும் அங்குள்ள ஐ. நா. பிரதிநிதியும் இணங்கியுள்ளனர்.

தமது படைகள் ஐ. நா. படைகளைத் தாக்காதென ஷோம்பே அறிவித்திருக்கிறார்.

### இலியோவின் அச்சம்

ஐ. நா. பாதுகாப்புச்சபை காங்கோவில் அவசியமானால் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள ஹமர்ஷீல்டுக்கு அதிகாரமளித்திருப்பதானது காங்கோவை ஐ. நா. தனது ஆட்சிக்குட்ப்டுத்திக் கொள்ளும் முயற்சியாகும் என்று கஸவுபுவால் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் இலியோ அச்சம் தெரிவித்திருக்கிறார்.

### பெல்ஜியத்துக்கு ஐ. நா. கோரிக்கை

பெல்ஜியம் அரசாங்கத்துக்கு ஐ. நா. அனுப்பியுள்ள ஒரு குறிப்பில் காங்கோவிலுள்ள சகலபெல்ஜிய துருப்புக்களையும் வாபஸ் பெறும்படி கேட்டிருக்கிறது.

### அங்கோலா விஷயம்

அங்கோலா போன்ற போர்த்துக்கீசர் ஆதிக்கத்திலுள்ள நாடுகளில் ஆபிரிக்க மக்கள் கேவலமான முறையில் அடிமைகள் போல் நடத்தப்படுவதை எதிர்த்து ஒழிக்க ஆபிரிக்க நாடுகளும் இதர நல்லெண்ணம் கொண்ட நாடுகளும் முன்வர வேண்டுமென்று கானு அரசாங்கம் கேட்டிருக்கிறது. போர்த்துக்கீசர் ஆட்சியின் கொடுமை பற்றி உலக தொழில் ஸ்தாபனத்தில் தெரிவித்து போர்த்துக் கல்லுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அதற்காக எல்லா ஆபிரிக்க நாடுகளும் ஆதரவளிக்க வேண்டுமென்றும் கானு கேட்டிருக்கிறது.

### கஸவுபு எதிர்ப்பு

காங்கோவில் அவசியமானால் பலாத்காரத்தைப் பிரயோகிக்க பிரதம காரியதரிசிக்கு அதிகாரம் வழங்குவதற்கு பந்தோபஸ்து சபை முடிவு செய்திருப்பதை காங்கோ ஜனாதிபதி கஸவுபுவும், அவரால் நியமிக்கப்பட்டிருக்கும் பிரதமர் ஜோஸப் இலியோவும் ஆட்சேபித்துள்ளனர்.

காங்கோவுக்கு உதவி தேவையானால் அதுதானகவே ஐ.நா.வைநாடும், ஆனல் ஐ.நா. தானகவே காங்கோவுக்குள் தலையிட அனுமதிக்கமுடியாது என்று அவர்கள் அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

ஸ்டான்லிவில்லியின் நிலைமை கொந்தளிப்பாய் இருக்கிறது என்று ஸ்ரீதயாள் ஹமர்ஷீல்டுக்கு அனுப்பியுள்ள ஒரு குறிப்பில் தெரிவித்திருக்கிறார்.

### கிஸாங்காவுக்கு தயாள் கடிதம்

லுமும்பாவின் ஆதரவாளரானகிஸாங்காவின் அதிகாரத்திலுள்ள ஸ்டான்லிவில்லியில் காவலில் வைக்கப்பட்டிருந்த 15 அரசியல்வாதிகளதும் உண்மை நிலைமை என்னவென்று கேட்டு ஐக்கியநாடுகள் பிரதிநிதி ஸ்ரீதயாள் கிஸாங்காவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

அங்கு இன்னும் உடனிருப்போரைப் பாதுகாக்கும்படி ஸ்ரீதயாள் கேட்டிருக்கிறார்.

## மேயர் மறியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் எடுக்க வேண்டுமென்று கோரும் ஒரு பிரேரணையை சமசமாஜக் கட்சி அங்கத்தவர் திரு. என். தேவபாலசுந்தரம் கொண்டுவந்தார்.

இப் பிரேரணையை திரு. ஆ. துரைராஜசிங்கம் அனுவதித்துப் பேசினர்.

இத்தீர்மானத்தை ஆதரித்து திரு. ஏ. ஜி. இராஜசூரியர், டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், திரு. எஸ். இராசரெத்தினம், திரு. கே. எஸ். நடராசா, திரு. எம். ஜேக்கப், திரு. பி. எம். ஜோன், திரு. நா. த. செல்லத்துரை, திரு. ஜே. எஸ். அழகையா ஆகியோர் பேசினர்கள்.

"தமிழ் மொழிக்கு உரிமையளிக்க மறுத்த காரணத்தினல் தமிழுக்கு உரிமைபெறுவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் போராட்டம் மோசமான நிலையை அடைவதற்கு முன்னர் தமிழ்த் தலைவர்களைச் சந்தித்து மொழிப் பிரச்சினைக்குப் பிரதமர் சுமுகமான முடிவு காணவேண்டுமென்று இச்சபை கேட்டுக்கொள்கிறது" என்னும் பிரேரணையை காதி எம். எம். சுல்தான் பிரேரித்தார். இப்பிரேரணையை ஹாஜி வி. எம். எம். அபூசாலி அனுவதித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

# யாழ்ப்பாணத்தில் இந்திய கைத்தறி நிலயக் கிளை

## நேற்று திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்

"இந்திய அரசினரின் கைத்தறி(ஹான்ட்லூம்ஸ்) கிளைஸ்தாபனத்தைத் திறந்து வைப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இக்கிளைஸ்தாபனத்தை ஹைகமிசனர் திரு.பி.கே, கபூர் அவர்கள் திறந்துவைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தவிர்க்கமுடியாத காரணங்களினல் அவர்கள் வரமுடியவில்லையாயினும் இன்னொருசமயத்தில் அவர் இங்கு விஜயம் செய்து கைத்தறி நிலய விழாவில் பங்கு பற்றுவார்" என நேற்று இந்தியக் கைத்தறி நிலயத்தின் யாழ்ப்பாணக் கிளையைக் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்துப்பேசிய கொழும்புநிலய மனேஜர் திரு எஸ். ராமச்சந்திரன் கூறினர்.

யாழ்ப்பாணம் பெரிய தெருவிலுள்ள அன்னை மாளிகையில் அழகுற விளங்கும் இந்நிலயத்தை யாழ்ப்பாணத்தில் ஏழு வருடங்களுக்கு முன்னர் திறந்திருக்க வேண்டுமெனக் கூறிய திருஇராமச்சந்திரன் இந்நிலயத்தை இங்கு திறந்து வைப்பதற்கு யாழ்ப்பாணம் ஜூபிட்டர்ஸ் வர்த்தக நிலயத்தினர் பேருதவியாய் இருந்தனர் எனவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

நிலயத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த அருமையான சித்திர வேலைப்பாடுகள் அமைந்த கைத்தறி ஆடைகள் கண்ணைக் கவர்வதாயிருந்தன. நிலயத்தைத் திறந்து வைத்த மறுகணமே அங்கு வந்த பெண்மணிகள் ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்த துணிகளை மள மளவென்று வாங்கினர். கைத்தறி ஆடைகளின் உயர்வையும் நீடித்த உழைப்பையும் அவர்கள் அறியாமலா இருப்பார்கள்!

## மொழிப் பிரச்சினையைத் தீர்க்க யோசனை

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாக ஞானேதயமாகி வருகின்றது. ஆனல் வெளியில் சொன்னல் அடுத்த தேர்தலில் வெற்றி கிடைக்காமல் போகுமோ என்று அச்சம். ஆகவே, தாங்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பு ஏற்காமல் கூட்டு பார்லிமெண்ட் கமிட்டியிடம் இதை ஒப்புவித்துவிடலாமென்றும் தமிழர் மொழி உரிமைக்காகத் தீவிரமாகப் போராடுவதை சாக்கிட்டு இம்மாறுதலைச் செய்யலாமென்றும், தமிழரல்லாதார் வட்டாரங்களில் கருத்து பலப்பட்டுவருகிறது. எப்படியும் இப்பிரச்சினை இனி இரு கட்சிகளிடையே இன்று தேசிய முறையில்தான் தீர்க்கப்படவேண்டும்.

* * *

இதே சமயத்தில் ஆர். ஜி. சேனநாயக்காவை சுதந்திரக் கட்சி வெளியேற்றிவிடவேண்டியதாயிற்று, அவர் இதுவரை சந்தேக நண்பராகவே இருந்தார். அவர் போனதால் ஒரு வாக்கு நஷ்டமே என்றாலும், கட்சிக்குள் இருந்த ஒரு 'பச்சோந்தி' நீங்கிவிட்டதென்பதே அக்கட்சியில் பலரது கருத்துமாகும்.


Choice




ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு.

# தமிழரசுக்கட்சியின் மறியல் இயக்கத்துக்கு அரசியல் கட்சிகள் ஆதரவு

யாழ்ப்பாணம் வெள்ளி

**மொழி உரிமைக்காக தமிழரசுக் கட்சி ஆரம்பித்துள்ள நேரடி நடவடிக்கை உச்ச நிலையை அடைந்து வருவது பற்றியும் சகல அரசியல் கட்சிகளையும் கொண்ட ஒரு மகாநாட்டை யாழ்ப்பாண நகர மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா நேற்று வியாழக்கிழமை மாலை நகர மண்டபத்தில் கூட்டினர்.**

கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. மகாநாட்டின்பின் இன்று காலை மேயர் துரைராஜா பத்திரிகைகளுக்கு பின்வரும் அறிக்கையை விடுத்தார்:-

யாழ்ப்பாண நகர மண்டபத்தில் சென்ற 23-ந் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு எல்லா முக்கிய அரசியல் கட்சிகளின் மகாநாடு நடைபெற்றது.

பார்லிமெண்ட் மெம்பர்களான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திரு. எம். சிவசிதம்பரம் இவர்கள் உள்ளிட்டு, முக்கிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜா தலைமை வகித்தார். விவாதத்தை ஆரம்பித்துவைக்கையில், மேயர் கூறியதாவது:

தமிழரசுக் கட்சியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டம், இத்தீவனைத்திலுமுள்ள தமிழ் பேசும் மக்களின் மதிப்பையும் கண்யத்தையும் நிலைநிறுத்துவதற்கு அடிப்படையான அவசியமாகும். தமிழரசுக்கட்சி இந்த இயக்கத்தை ஆரம்பித்தாலும் இந்த இயக்கம் பூரண வெற்றி அடைய சாத்தியமான எல்லா உதவிகளையும் அளிக்க வேண்டியது தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரதும் தவிர்க்க முடியாத கடமையாகும். தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் ஐக்கியப்பட்டிருப்பதைக் காட்ட, இது சரியான சமயமும், பொன்னான சந்தர்ப்பமுமாகும். தமிழ்ப் பேசும் மக்கள் பொதுவான இலட்சியத்துக்காக சகல கட்சிகளும் ஒன்றுபட்டுப் போராடுவதற்கு இது தகுந்த சந்தர்ப்பம்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். நடராசா, சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். ஆர். தர்மரத்தினம், திரு. ஏ. விஸ்வநாதன், யாழ்ப்பாண முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளான காதி எம். எம். அபூசாலி, வட இலங்கைக் கிராமச் சங்கங்களின் சங்கத் தலைவர் திரு. வி. அருளம்பலம், டாக்டர் இ. எம். வி. நாகநாதன், திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோரும் மகாநாட்டில் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.

மாநாட்டின் முடிவில் பின்வரும் இரு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

தமிழ்ப் பேசும் மக்களுக்கு அவர்களுடைய ஜீவதாரமான உரிமைகளை அரசாங்கம் அளிக்கவேண்டுமென்று பல்வேறு அரசியல் கட்சிகளையும் கொண்ட இந்தமகாநாடு கோருகிறது. தங்கள் மொழி உரிமையைப் பெறுவதற்காக தமிழ்ப் பேசும் மக்கள் நடத்தும் போராட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டியதுடன் தீவிரப்படுத்தவும் வேண்டும். இதை அடைவதற்காக அவசியமான வழிவகைகளை இந்த மகாநாடு மேற்கொள்ளும்.

தமிழரசுக்கட்சி இம்மாதம் திங்கட்கிழமை ஆரம்பித்த மறியல் இயக்கத்தின் முதல் நாளன்று சத்தியாக்கிரகிகள் மீதும், பொதுமக்கள் அரசாங்க ஊழியர் மீதும் பொலிசார் மனிதாபிமானமற்ற முறையில் மிருகத்தனமாகத் தாக்குதல் நடத்தியதை இந்த மகாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், பொலிசாரின் வெட்ககரமான இந்த நடவடிக்கை பற்றி உடனடியாக விசாரணை நடத்தவேண்டுமென்றும் இந்த மகாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

இச்செய்திகள் விசேஷ பதிப்பில் வெளியிடப்பெற்றன.

மொழிப் போராட்டம்

# "முஸ்லிம் மக்களும் ஈடுபட வேண்டும்"

யாழ்ப்பாணம் வெள்ளி

முஸ்லிம்களும் மொழிப் போராட்டத்தில் பங்குபற்ற வேண்டுமெனக் கோரி மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ஜனப் எம். ஏ. ஸி. எஸ். ஏ. காதர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண முஸ்லிம்களாகிய நாம் இன்று நடக்கும் மொழிப் போராட்டத்தில் கலந்துகொள்ளாது இருக்க முடியாது. நமது மொழி தமிழ் மொழி. எனவே, முஸ்லிம்களாகிய நாமும் கட்டாயமாக நமது தமிழ் மொழிக்கு உரிய உரிமையைக் கோரி நடத்தும் இந்த மொழிப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்! என்று அந்த அறிக்கையில் அவர் கேட்டுள்ளார்.

# ஐந்தாம் நாள் மறியல் இயக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

உடுப்பிட்டித் தொகுதித் தொண்டர்கள். திரு. கே. ஜெயக்கொடி தலைமையில் இன்று காலை கச்சேரி முன் மறியல் இயக்கத்தை ஆரம்பித்தனர்.

தமிழரசுக் கட்சி ஆரம்பித்துள்ள மறியல் இயக்கம் இன்று ஐந்தாவது நாளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. இன்றைய மறியல் இயக்கத்தில் பெண் தொண்டர்கள் கலந்துகொள்ள மாட்டார்களென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் காலை 9 மணிக்கு மேல் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் பெண் தொண்டர்கள் சிலர் கச்சேரியின் பிரதான வாசலின் முன் உட்கார்ந்து மறியல் செய்தனர்.

திருமதி மங்கையர்க்கரசி 'நமச்சிவாய வாழ்க' என்று ஆரம்பித்து சிவபுராணம் சொல்லிக் கொடுக்க இதர தொண்டர்களும் திருப்பிச் சொன்னர்கள்.

தொண்டர்கள் அமைதியாக கச்சேரியின் சகல வாசல்களிலும் உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருக்கின்றனர். பொலிசார் வழக்கம்போல் காவல்புரிந்துகொண்டிருக்கின்றனர். பொலிஸ் லொறியில் ஆயுதந் தாங்கிய பொலிசார் 'எதற்கும் தயாராக' காத்து இருக்கின்றனர்.

சென்ற மூன்று நான்கு தினங்களாக கச்சேரிப் பகுதியில் காணப்பட்ட பொலிஸ் சுப்ரிண்டெண்ட் திரு. ஆண்ட் இன்று காலையில் காணப்படவில்லை.

இணையற்ற 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

முகராசியுள்ள ஜெமினி கணேசன் எழில்ராசியுள்ள பி. சரோஜாதேவி



மற்றும்

சகஸ்ரநாமம்
எம். வி. ராஜம்மா
எம். ஆர். ராதா
கே. மாலதி
தங்கவேலு
மோகன
கே. டி. சந்தானம்

நடித்த



வாசு பிலிம்ஸ்

டைரக்ஷன்: கே. சங்கர்

# கைராசி

இசை அமைப்பு: ஆர். கோவர்த்தனம்

இப்பொழுது திரையிடப்படுகிறது! மனேகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், பத்மினி, பாலச்சந்தர், சந்திரபாபு நடித்த

# மரகதம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேல வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ந் [illegible]